மே 13, 2012

தினகரன் மாம்பலம் சன்டே

### மருத்துவமனை நிர்வாக படிப்பில்

# பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 மாணவருக்கு வேலைவாய்ப்பு



கண் மருத்துவத்துறையில் பிரபலமான சங்கர நேத்ராலயா, தனது மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு அங்கமாக சங்கர நேத்ராலயா அகாடமி சார்பில், மருத்துவத்துறை சார்ந்த அறிவியல், மருத்துவமனை நிர்வாகம் போன்ற படிப்புகளை துவக்கி, 10 மற்றும் பிளஸ்டு முடித்த மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.இதுகுறித்து இந்த அகாடமி மேலாளர் மகாலிங்கம் கூறுகையில், 'ஏ டு இஸட் வரையான அனைத்து சுகாதார சேவைகள் பற்றிய பாடங்களை வழங்குவதே எங்கள் நோக்கம். கலை, அறிவியல் கல்லூரிகளில் வழங்கப்படும் கல்வியை நவீன தொழில்நுட்ப வசதியுடன் எங்கள் அகாடமி வழங்குகிறது.

சுகாதாரத்துறை விரிவடைந்து வரும் நிலையில் பன்னாட்டரங்கில் பிரபலமான எங்கள் நிறுவனத்தின் மூலம் செய்முறை பயிற்சிகளோடு பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுவதால் மாணவர்கள் பெறும் கல்வியறிவு, திறமைக்கு வேலைவாய்ப்பு நிச்சயம்.

மேலும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகத்தின் நிபுணர் குழு, மருத்துவத்துறை சார்ந்த புதிய படிப்புகளை இந்த கல்வியாண்டு முதல் அறிமுகம் செய்துள்ளது. இந்த பல்கலைக்கழகமானது மனித வளத்தை மேம்படுத்துவது, தரமான மருத்துவ சேவை, வேலைவாய்ப்புகளை வழங்குவது ஆகிய நோக்கங்களுடன் பல்வேறு மருத்துவ பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்கி வருகிறது. மேலும் இப்பல்கலைக்கழகம் இந்த ஆண்டு டிப்ளமோ இன் ஆபரேஷன் தியேட்டர் மற்றும் மயக்க மருந்தியல் டெக்னாலஜி, டிப்ளமோ இன் கண் மருத்துவ செவிலியர் உதவியாளர், பி.எஸ்.சி லேப் டெக்னாலஜி, எம்.பி.ஏ மருத்துவமனை மேலாண்மை முறை ஆகிய படிப்புகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது' என்றார்.

தொடர்புக்கு: மாகலிங்கம், அகாடமி ஆபிசர், தி சங்கர நேத்ராலயா அகாடமி, சென்னை-600 006. தொலைபேசி எண்கள்: 97104 85295. இ-மெயில் முகவரி: mahali@snmail.org